1969 மார்ச் 26]

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

ஒரு வினாவிற்கு விடையளிக்கையில் உறுப்பினர் அவையில் இல்லாததால், அவர் அவைக்கு வந்த பின்னர் அவ்விடையை மீண்டும் அளிக்க கோரல்.

திரு. தி. தீர்த்தசிரிகவுண்டர்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார். நான் சபைக்குக் கொஞ்சம் தாமதமாக வந்த காரணத்தினால், என் பெயரில் கொடுக்கப்பட்ட 487-ம் எண்ணுள்ள கேள்வி எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது நான் சபையில் இல்லை. அந்தக் கேள்விக்கான பதிலின் விபரம் என்ன என்று அறிவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி அளிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஆகாது.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் இப்பொழுது இடமில்லை.

3. அறிவிப்புகள்

(அ) ஒற்றிவைப்புத் தீர்மானங்களை மறுநாளைக்கு எடுத்துக்கொள்ளல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சோ. அழகர்சாமி, திரு. டி. மார்டின் ஆகிய இருவரும் இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன்.

4. அரசினர் தீர்மானம்

விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு

(அ) பட்டுக்கோட்டையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை நகரில் 6—3—1969 அன்று நடந்த தீ விபத்தில் சிறு கடைக்காரர்கள், குடிசைகளில் வசிக்கும் ஏழைகளின் சொத்துக்கள் வீடுகள் சுமார் ஒரு லட்சம் பெறுமானமுள்ளவை சேதமடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பட்டுக்கோட்டை நகரில் நகராட்சி எல்லையில் 6—3—1969 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இதன் விளைவாக, மூன்று குடிசைகள், மூன்று தேனீர்க்கடைகள், மூன்று தையல் கடைகள், தொடக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று, ஒரு மளிகைக் கடை,

வெற்றிலைப் பாக்குக் கடைகள் இரண்டு, வேர்க்கடலைக் கடைகள் இரண்டு, ஒரு சலவைச் சாலை, ஒரு தச்சுப் பட்டறை ஆகியவை தீக்கிரையாயின. சாலையோர விற்பனையாளர் (ஹாக்கர்) உடைமைகளும் (பூட்சுகள்) தீயில் அழிந்தன. உயிர்ச் சேதம் எதுவுமில்லை. உடைமைகள் விரயத்தின் மொத்த மதிப்பு ரூ. 15,400 என்று மதிப்பிடப்படுகிறது. புதுக்கோட்டை, வருவாய்க் கோட்ட அதிகாரி, நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்று பார்த்து, தீயினுல் பாதிக்கப்பட்டோருக்குத் துயர் தணிப்பு வழங்க ஏற்பாடு களை மேற்கொண்டார். இந்தத் தீவிபத்து தற்செயலாகவே ஏற்பட்டது என்றும், வேண்டுமென்றுஎவரும் தீ வைத்ததாகச் சந்தேகப்படுவதற் கில்லை என்றும், பட்டுக்கோட்டை தாசில்தார் அறிவித்துள்ளார். தீ விபத்தில் வீடிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் 7—3—69 அன்று ரூ. 50 வழங்கினர்.

(ஆ) வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களும் பாதிக்கப்பட்ட மக்கள் நிலையும்.

திரு. நா. வீராசாமி : *பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவை யின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான கீழ்க்கண்ட காரி யத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—*

"கடந்த 26—2—1969-லிருந்து தொடர்ந்து வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் தனியார் குடிசைக்கும், அரிசி ஆலைக்கும், அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கும் தீ வைக்கப்பட்டு வருவதனுல் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை பற்றியது."

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Sir, the Collector of North Arcot has reported that there were fire accidents in Kalavai village in Wallajah taluk on 20th February, 2nd, 4th and 6th March 1969 resulting in destruction of sugarcane crops, tea shop, part of rice mill and the high school shed. The total value of property lost was about Rs. 5,000 out of which the school's share was Rs. 4,000. As no residential houses were involved, the question of granting cash relief did not arise.

The school shed was lost in the fire on 6th March 1969 and prior to that date, the school was running 4 sections in the shandy sheds and under the greenwood trees and 3 sections in the shed which was burnt. The Tahsildar, Wallajah and Block Development Officer, Timiri, were instructed by the District Revenue Officer to arrange for suitable accomodation to run the school. The Chief Education Officer, Vellore, is of the opinion that all the sections could be run in the temporary buildings without much inconvenience as the classes have to be run only till the first week of April 1969. He has promised to spare some amount from out of the funds available with him under Secondary Education Fund.

The Superintendent of Police, North Arcot district, visited the scene of occurrence in all the four cases on 15th March 1969. He is of the opinion that the fires which broke out on 20th February and 6th March 1969 were accidental while the fires on 2nd and 4th March 1969 were not free from mischief and in this connection, one insane Mooban, aged 25 years, son of Bomini is suspected. It is reported that 4 cases under Section 436, I.P.C., have been registered in Kalavai Police Station and the Inspector of Police, Cheyyar has taken up personal investigation in all of them. Investigation made by the Police discloses that it is not true that fires were started to divert the public in order to commit thefts as no such thefts have actually taken place. This does not appear to be any political motive as there is no faction among the political sympathisers in the village. Police patrols have been strengthened in the area to prevent further incidents.